**விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம், நல்லமநாயக்கன்பட்டி ஊராட்சி, சங்கரலிங்காபுரம் கிராமம் தச்சன்குளம் கண்மாய்க்கரை சரிவில் நிறுவப்பட்டிருந்த கல்லில் செதுக்கப்பட்ட பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் முழுஉருவச் சிலைக்குப் பதிலாக அதே இடத்தில் வெண்கலத்திலான முழு உருவச் சிலையை நிறுவ அரசின் அனுமதி அளித்தல்.**

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ஊ.2) துறை

அரசு ஆணை (நிலை) எண்.115 நாள். 10 .7.2008.

படிக்கப்பட்டது.

1. அரசு கடித எண்.15611/சி3/94–6, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 12.6.1995.
2. அரசு ஆணை (நிலை) எண்.248, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 23.11.1998.
3. விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடித எண்.சி1/1818/2008, நாள் 30.4.2008.
4. ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்குநர் அவர்களின் கடித எண்.33183/08/பரா.அ1.2, நாள் 13.6.2008.

**ஆணை:**

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம், சங்கரலிங்காபுரம் கிராமத்தில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் முழு உருவ வெண்கலச் சிலை அமைப்பதற்கு திரு.மு.கந்தசாமி தேவர் மற்றும் ஊர் பெரியோர்கள் அனுமதி கோரியிருந்தனர்.

2. கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பு இராஜபாளையம் வட்டம், நல்லமநாயக்கன்பட்டி பஞ்சாயத்து, சங்கரலிங்காபுரம் கிராமம் (துச்சன்குளம் புறம்போக்கு) புல எண்.313/1–ல் மொத்த விஸ்தீரணம் 36.53.5 ஹெக்டேர் பரப்பில் உள்ள 25 சதுர மீட்டர் நிலத்தில் கண்மாய் கரையில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் முழு உருவச்சிலை கல்லில் செதுக்கப்பட்டு மேற்படி இடத்தில் நிறுவப்பட்டு இருந்தது. அந்தச் சிலை 3.3.08 அன்று அதிகாலையில் சிலரால் சேதப்படுத்தப்பட்டது. இதுகுறித்து கீழராஜகுலராமன் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு காவல் துறையினரால் இருவர் கைது செய்யப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், இந்நிலையில் சம்பந்தப்பட்ட கிராமத்தை சேர்ந்த சமுதாயப் பெரியோர்கள் ஏற்கனவே தேவர் சிலை இருந்த இடத்தில் வெண்கலத்தாலான முழு உருவச் சிலை அமைக்க அனுமதி கோரியுள்ளனர். சிலை அமைக்க கிராம மக்களிடம் ஆட்சேபனை இல்லை எனவும், மேற்படி கிராமத்தில் ஒரே சமுதாய மக்கள் அதிகம் வசிப்பதால் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்பட வாய்ப்பில்லை என்பதால் அரசு விதிகளுக்கு உட்பட்டு அனுமதி அளிக்கலாம் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார். 30.4.2008 அன்று நல்லமநாயக்கன்பட்டி ஊராட்சி மன்றம் சிலை அமைக்க தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. சிலை அமைக்க ஏற்பாடு செய்யும் பெரியோர்கள், சிலை அமைத்து அதை பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள உறுதி அளித்துள்ளனர் எனவும், சிலை அமைப்புக் குழுவினரால் நல்ல உயரமான பீடத்தில் சிலை அமைக்கப்பட்டு அதை பாதுகாக்கும் பொறுப்பை சிலை அமைப்பவர்களே ஏற்க வேண்டும், சிலையைச் சுற்றி நான்கு பக்கமும் கம்பிவேலி அமைக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் அரசு விதிகளுக்குட்பட்டு சிலை அமைக்க அனுமதிக்கலாம் என்ற மாவட்ட ஆட்சியரின் கருத்துருவினை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அவர்கள் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

3. மேலே ஒன்று மற்றும் இரண்டில் படிக்கப்பட்ட அரசு கடிதம் மற்றும் அரசு ஆணை ஆகியவைகளுடன் விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் கருத்துரு மற்றும் ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி

ஆணையரின் பரிந்துரையினை அரசு கவனமுடன் பரிசீலித்து விருதுநகர் மாவட்டம், நல்லமநாயக்கன்பட்டி ஊராட்சி, சங்கரலிங்காபுரம் கிராமம், புல எண்.313/1–ல் 25 ச.மீ பரப்பில் தச்சன்குளம் கண்மாய் கரையில் வெண்கலத்தாலான பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் முழு உருவச் சிலையினை அமைக்க கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது :–

(I) சிலை வெண்கலத்தினால் சிலை வைப்பவர்களின் பொருட் செலவிலே அமைத்து அதனை பாதுகாத்து மற்றும் பராமரிக்கப்பட வேண்டும்.

(II) சிலையைச் சுற்றி நான்கு பக்கமும் இரும்பு கம்பிவேலி அமைத்து பாதுகாக்கப்பட வேண்டும்.

(III) சிலையை நல்ல உயரத்தில் பீடம் அமைத்து அதன் மேல் சிலையை நிறுவ வேண்டும்.

(IV) கம்பித்தடுப்பு நல்லமுறையில் அழகுற அமைக்கப்பட வேண்டும்.

(V) அவ்வாறு சிலையைச் சுற்றி கம்பிவேலி அமைக்கும்போது சிலை தலைவர் ஜெயிலுக்குள் அடைக்கப்பட்டது போன்ற தோற்றத்தை உருவாக்கக் கூடாது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி,**
**முதன்மைச் செயலாளர்.**